# ரூஹா சுவாச காற்று

காற்று – 15 அக்டோபர் 2025 சுவாசம் – 09
ஆண்டு சந்தா ₹ 200/- தனி இதழ் ₹ 20/-





# இதயம் திறந்து உங்களுடன்

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளுக்கு,

இரட்சகராம் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நானும் என் மனைவியும் இஸ்ரவேல் தேசத்திலிருந்து உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். தேவனுடைய கிருபையால் நலமாய் இருக்கிறீர்கள் என்று விசுவாசிக்கிறேன்.

கடந்த ஒன்பது மாதங்களாக, நம் அனைவரோடும் இருந்து பாதுகாத்து, இந்த பத்தாவது மாதத்திற்கு நம்மை கரம் பிடித்து அழைத்துக்கொண்டு வந்த தேவனை மனதார துதிக்கிறேன். உங்களுடைய ஜெபத்தினாலும் காணிக்கைகளினாலும் ரூஹா ஊழியத்தைத் தாங்கிக்கொண்டு வருகிற உங்கள் அனைவருக்கும், எனது அன்பான நன்றியைக் கூறிக்கொள்கிறேன். கர்த்தர் உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக!

## ஜார்கண்ட் மிஷனெரி ஊழியங்கள்

கடந்த செப்டம்பர் மாதம் நானும் எனது மகன், மகள் மற்றும் ரூஹா குழுவினருடன் இணைந்து ஜார்கண்ட் மாநிலம் வடமேற்கு பகுதியில் உள்ள தும்கா என்ற மாவட்டத்தில் மூன்று நாட்கள் மிஷனெரி பயணமாக செல்ல தேவன் கிருபை செய்தார். அங்குள்ள மிஷனெரி ஊழியர்களைச் சந்தித்து, கர்த்தருடைய வார்த்தையினால் அவர்களை பெலப்படுத்தி, இசைக்கருவிகளை பரிசாக வழங்க தேவன் கிருபை செய்தார். மேலும் தன்பர்ஷா என்ற இடத்தில் புதிய ஆலயத்தைக் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த ஊழியத்திற்காக ஜெபித்த கொடுத்த ஒவ்வொருவரையும் தேவன் ஆசீர்வதிப்பார். இந்த மிஷனெரி பயணத்தின் முழு அறிக்கை இந்த இதழில் பக்கம் 9,10ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## இல்லாதவைகளை இருப்பவைப்போல - புதிய பாடல் வெளியிடு

ஒரு நாள் அதிகாலையில் ரோமர் 4:17 ஐ வாசித்து, தேவன் ஆபிரகாம் வாழ்க்கையில் செய்த இயற்கைக்கு அப்பாற்றபட்ட காரியத்தைக் குறித்து தியானித்துக் கொண்டிருந்தேன். தேவனுடைய அற்புதமான செயலையும் நம்மேல் எவ்வளவு கரிசனையுள்ளவராயிருக்கிறார் என்பதையும் நினைத்து தேவனுக்கு நன்றி செலுத்தி துதித்துக்கொண்டிருந்தபோது இந்த பாடல் பிறந்தது. அதை ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்து வெளியிட தேவன் கிருபை பாராட்டினார். நம்முடைய தேவன் இல்லாதவைகளை இருப்பவைப்போல அழைத்து உருவாக்கித் தருகிறவர். நிச்சயமாக உங்கள் வாழ்க்கையின் விருப்பங்களை நிறைவேற்றி, தேவைகளை சந்திப்பார்.

**Youtube**ல் **Alwin Thomas** பக்கத்தில் உள்ள இந்த பாடலைக்கேட்டு மற்றவர்களுக்கும் செய்யுங்கள்!

அதுமட்டுமல்லாது இன்னும் அநேக பாடல்களை ஒலி பதிவு செய்யப்பட்டு, அதை வீடியோ எடுப்பதற்கு முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். வருகிற அக்டோபர் 20ம் தேதி தீபாவளியன்று பழைய கீர்த்தனை பாடல்கள் அடங்கிய தொகுப்பு ஒன்றை வெளியிட இருக்கிறோம். இந்த பாடல் ஊழியங்களுக்காக ஜெபித்துகொள்ளுங்கள். கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் ஒரு பாடல் வெளியிடுவதற்கான செலவை குடும்பமாக பொறுப்பெடுத்து, தேவ ராஜ்யத்தின் சுவிசேஷ பணிக்கு உதவுங்கள்.

## ஆத்தும அறுவடைக்காக ஜெபியுங்கள்

ஒரு நாளோ, ஒரு வாரமோ, ஒரு மாதமோ, ஒரு வருடமோ நம்மை விட்டு கடந்துபோகும்போது, நம்முடைய ஆயுசு நாட்களில் ஒரு வருஷம் குறைவது மட்டுமல்ல, இயேசுகிறிஸ்துவின் வருகையும் சமீபமாய் நெருங்கிக்கொண்டிருக்கிறது என்பதும் உண்மையே.

அப்போஸ்தலர்கள் நாட்களில் நடந்த எழுப்புதல் நம் இந்திய தேசத்திலும் ஒவ்வொரு பட்டணத்திலும் நடைபெற 24 மணி நேரமும் ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய தீவிரமாக உழைத்துக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு மாதமும் ரூஹா ஊழியத்தின சார்பாக ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டு வருகிறது. கடந்த மாதம் சுமார் 18 வாலிபர்கள் தங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கென்று முற்றிலுமாக அர்ப்பணித்து பிதா, குமாரன், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானத்தை எடுத்துக்கொண்டார்கள். “நீங்கள் உலகமெங்கும் புறப்பட்டுப்போய் சர்வ சிருஷ்டிக்கும் கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கியுங்கள்” (மாற்கு 16:15) என்ற கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்படிந்து, அமெரிக்கா முதல் ஆஸ்திரேலியா வரைக்கும் சென்று, என்மேல் கர்த்தர் வைத்திருக்கிற அப்போஸ்தல ஊழியத்தை நிறைவேற்றி வருகிறேன்.

அடியேனுக்காகவும், நம்முடைய ரூஹா ஊழியக் குடும்பத்திற்காகவும், விசேஷமாக இந்த அக்டோபர் மாதத்தில் செய்து முடிக்க வேண்டிய எல்லா ஊழியங்களையும் தேவ சித்தத்தின்படியே ஜெயமாக செய்து முடிக்கத்தக்கதான கிருபைகளை கர்த்தர் எங்களுக்குத் தந்தருளவும் தினமும் ஜெபியுங்கள்.

கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

உங்கள் சகோதரன்

**போதகர் ஆல்வின் தாமஸ்**

# நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு «பெருகுவாய்»

தீர்க்கதரிசன செய்தி

**ஏசாயா 54:3**

**நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்; உன் சந்ததியார் ஜாதிகளைச் சுதந்தரித்துக்கொண்டு, பாழாய்க்கிடந்த பட்டணங்களைக் குடியேற்றுவிப்பார்கள்.**

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான அன்பு தேவ பிள்ளைகளே... கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக!

கடந்த செப்டம்பர் மாதம் 22ம் தேதி எபிரேய காலண்டரின்படி, புதிய வருடம் 5786 ஆரம்பித்திருக்கிறது. 5786 ஒரு தீர்க்கதரிசன வருடமாகும். இதில் 6 என்ற எண் பெருக்கத்தைக்குறிக்கிறது. 6வது நாளில் தேவன் மனிதனை உருவாக்கினார். இது மனிதனுடைய நாள். தேவன் மனிதனை உருவாக்கின நாள் அன்றே அவனை பெருக்க வேண்டும் என்று நினைத்தார். ஆகவே, மனிதனுக்குள் உயிரணுக்களை வைத்து அதன் மூலமாக பெருகப்பண்ணினார். ஆதியாகமம் 1:28ல் நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி என்று அவர்களை ஆசீர்வதித்தார். தேவனுடைய சுவாசத்தினாலும் கைகளினாலும் உருவாக்கின மனிதனை தேவன் இந்த புதிய எபிரேய வருடத்தில் பெருகப்பண்ணி, மகிமைப்படுத்தப்போகிறார்.




**ஏசாயா 54:3 நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்; உன் சந்ததியார் ஜாதிகளைச் சுதந்தரித்துக்கொண்டு, பாழாய்க்கிடந்த பட்டணங்களைக் குடியேற்றுவிப்பார்கள்.**

ஆம் பிரியமானவர்களே, இந்த மாதம் நீங்கள் வலது புறத்திலும் இடது புறத்திலும் இடங்கொண்டு பெருகப்போகிறீர்கள். இது உங்களுக்கு பெருக்கத்திற்கான நேரம். எந்தெந்த காரியங்களில் நீங்கள் குறைவுபட்டு இருக்கிறீர்களோ, நெருக்கப்பட்டு இருக்கிறீர்களோ அவைகள் எல்லாவற்றிலும் தேவன் ஒரு பெருக்கத்தை கட்டளையிடப்போகிறார். ஒரு அணைக்கட்டிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டால் எப்படி வெள்ளம் பெருக்கெடுத்து பரந்த பூமிக்குள் வேகமாக பரவிச்செல்லுமோ, அதுபோலவே கர்த்தர் உங்களுக்கு கொடுக்கப்போகிற ஆசீர்வாதத்தில் நீங்கள் பெருகப்போகிறீர்கள். இது ஏதோ கணக்குபோடக்கூடிய அளவு பெருக்கம் அல்ல. வெடித்து பெருகிற பெருக்கம்.

**சின்னவன் ஆயிரமும் சிறியவன் பலத்த ஜாதியுமாவான் (ஏசாயா 60:22)** என்ற கர்த்தருடைய வார்த்தையின்படி சிறியவர்களாய் என்னப்பட்ட நீங்கள் ஆயிரமாய் பெருகுவீர்கள். மற்றவர்களால் ஒடுக்கப்பட்டு புறந்தள்ளப்பட்டு நிற்கிற உங்களை பலத்த ஜாதியாய் மாற்றப்போகிறார். நீங்கள் பல நாட்களாக கவலையினாலும் கண்ணீரினாலும் கர்த்தரை பாடி மகிழ்கிறதையும் துதிக்கிறதையும் மறந்து விட்டீர்கள். ஆனால் இந்த ஆண்டு அநேக பாடல்களை கெம்பீரமாய் பாடவும், நடனமாடவும் செய்யபோகிற அற்புதங்கள் உங்கள் குடும்பங்களில் நடக்க போகிறது. உங்கள் வீட்டில் அநேக நல்ல காரியங்களும் சுப காரியங்களும் நடக்கபோகிறது. ஆகவே கர்த்தரை துதித்துப்பாடுங்கள்.

புத்திரபாக்கியமின்றி கண்ணீரோடு இந்த செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் சகோதரியே.. கர்த்தர் உன்னை களிகூரச் செய்ய போகிறார். நீ மகிழ்ந்து பாடப்போகிறாய். யாருடைய வாழ்க்கையெல்லாம் மலட்டுத்தன்மை போல ஆசீர்வாதமின்றி இருக்கிறதோ அவர்கள் எல்லாம் பாடப்போகிறார்கள். எந்தெந்த குடும்பங்கள், சபைகள் மலட்டுதன்மையில் காணப்படுகிறதோ, தேவன் உங்களை கெம்பீரித்துப்பாடச் செய்யபோகிறார். இதுவரை வெட்கத்தை அனுபவித்து, தலைகுனிவை சந்தித்த அருமையான சகோதரியே சகோதரனே.. எந்த இடத்தில் நீங்கள் வெட்கப்பட்டீர்களோ அதே இடத்தில் தேவன் உங்களை தலையை உயர்த்த போகிறார். உங்கள் குடும்பத்தினர் முன்பாக கர்த்தர் உங்களை மேன்மை படுத்தப்போகிறார். எப்படி தெரியுமா? தேவன் உங்களை பெருகச்செய்வதின் மூலமாகவே..

## பெருகச்செய்வதே தேவனின் விருப்பம்

அன்பானவர்களே, வேதத்திலே சற்று ஆழமாக தியானித்துப் பார்போமானால் தேவன் தம்முடைய ஜனங்களை பெருகச் செய்வதேயே தம்முடைய விருப்பமாக கொண்டிருந்தார் என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு என நம்முடைய முற்பிதாக்கள் எல்லாருக்கும் தேவன் கொடுத்த முக்கியமான ஆசீர்வாதம் அவர்களுடைய தேசத்திலே அவர்களுடைய எல்லைகளை தேவன் இடங்கொண்டு பெருகச் செய்ததுதான். கர்த்தர் ஆபிரகாமிடம் சொன்னார், **நீ கால்மிதிக்கும் தேசத்தையும் கண்பார்க்கிற பூமியையும் உனக்குத் தருவேன். (ஆதியாகமம் 13:17)**

சற்று நிதானித்து பார்த்த போது, உலத்தில் நமக்கு கிடைக்கும் பொன்னும் பணமும் மற்ற உலகப்பொருட்களும் அழியக்கூடியது, மதிப்பு குறையக்கூடியது. ஆனால் நிலத்தின் மதிப்போ நாளுக்கு நாள் உயரக்கூடியது. நம்முடைய தலைமுறை தலைமுறைக்கும் சென்று சேரக்கூடியதாக இருக்கிறது. அதனால்தான் என்னவோ இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாருமே தங்களுடைய முதற்கட்ட ஆசீர்வாதம் விருப்பமும் தேசமாக இருந்தது. சரியான நிலம் நமக்கிருக்குமானால் நாம் ஒன்றிருக்கும் பயந்து கொண்டிருக்க மாட்டோம். எல்லாருடைய முன்பாக தலை நிமிர்ந்து நிற்போம். இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கு அரணிப்பான நிலையான தேசம் இல்லாத படியினால அங்களாய்த்து அலைந்து எதிரிளோடு போராடி கொண்டிருந்தாகள், இஸ்ரவேல் மதிக்கப்படவில்லை. ஆனால் கர்த்தர் ஒரு தாவீதை ஏற்படுத்தினபோது, இஸ்ரவேல் ஒரு அசைக்க முடியாத சாம்ராஜ்யமாக மாறியது. அதுபோலவே 1948ம் ஆண்டு சிதறிப்போ யிருந்த இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய முற்பிதாக்கள் வாழ்ந்த தேசமான இஸ்ரவேல் தேத்தை சுதந்திரமாக பெற்றுக்கொண்டார்கள். இன்றைக்கோ உலகத்தில் உள்ள நாடுகளுக்கு சவால் விடும் அளவிற்கு எல்லாவற்றிலும் முதலிடம் வகிக்கின்றார்கள். அறிவியல், விவசாயம், தொழில்நுட்பம் என அனைத்து துறைகளிலும் முத்திரை பதித்திருக்கிறார்கள். காரணம் அவர்கள் ஆழமாய் தடம் பதிக்க ஒரு தேசம் என்று ஒன்று இருப்பதால்தான்.

ஆம் பிரியமானவர்களே, தேவன் உங்களுக்கென்று சொந்தமான பூமியை, சொந்தமான வியாபாரத்தைத் தரப்போகிறார். நீங்கள் நீண்ட நாட்களாக ஜெபித்துக்கொண்டிருந்த காரியங்கள் உங்களுக்கென்று சொந்தமாக மாறப்போகிறது. அப்போது சூழ்நிலைகள் எல்லாம் மாறும். நீங்கள் ஆசீர்வாதத்தினால் பெருகுவீர்கள்.

## எல்லைகளை பெரிதாக்கும் கர்த்தர்

வேதத்தில் யாபேஸைக் குறித்து நீங்கள் பார்த்திருக்கலாம். அவருடைய வாழ்க்கையின் துவக்க புள்ளியே மிகவும் துக்கமாகத்தான் இருந்தது. எவ்வளவு மோசமான சூழ்நிலையில் அவருடைய குடும்பம் இருந்தார்கள் என்று வேதம் குறிப்பிடாவிட்டாலும் அவன் தாய் அவனை துக்கத்தோடே பெற்றேன் என்று சொல்லி யாபேஸ் என்று பேரிட்டாள். யாபேஸ் என்றாலே துக்கம், அற்பமான சூழ்நிலை. ஆனால் அப்படிபட்ட யாபேஸ் விசுவாசத்துடன் ஒரு ஜெபத்தை ஏறெடுக்கிறார்.

**யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி: தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என்று வேண்டிக் கொண்டான்; அவன் வேண்டிக்கொண்டதைத் தேவன் அருளினார். (1 நாளாகமம் 4:10)**

கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு மறுஉத்தரவு அருளி எல்லையை பெரிதாக்கினார். ஆம் பிரியமானவர்களே, உங்கள் வாழ்க்கையும் வலி நிறைந்த துக்கத்தோடு காணப்படுகிறதா? எல்லாவற்றையும இழந்து போய் தவிக்கிறீர்களா?

யாபேஸைப் பாருங்கள். அவர் தன்னுடைய சூழ்நிலையை பார்க்காமல் மகாபெரிய தேவனை நோக்கி பார்த்தார். யாபேஸின் எண்ணங்கள், தரிசனங்கள் பெரிதாக இருந்தது. அதை காட்டிலும் தேவனை அவர் குறைத்து எடைப்போடவில்லை. எல்லையைப் பெரிதாக்கும் என்று பெரிதானவைகளை கேட்டு பெற்றுக்கொண்டார்.

அவரை நேசிக்கிற நீங்கள், சுகமாய் சொந்த இடத்திலே வாசம்பண்ண போகிறீர்கள். இந்த ஆண்டு அநேகர் சொந்த வீட்டை வாங்க போகறீர்கள். நெருக்கத்தின் சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? கர்த்தர் சொல்லுகிறார், "உங்கள் பிள்ளைகளுக்கும், உங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் தங்கும்படியான இடத்தை நான் கொடுக்கப் போகிறேன். இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் சொல்லுகிறேன் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிக்கொடுங்கள்; நீங்கள் செழிப்பீர்கள்."

## கூடாரத்தை விசாலமாக்கு

**உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு; உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும்; தடைசெய்யாதே; உன் கயிறுகளை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து. (ஏசாயா 54:2)**

கர்த்தர் நம்மை பெருகச் செய்வதற்கு மிகவும் முக்கியமானது உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்குவதுதான். உதாரணத்திற்கு உங்களுடைய வீட்டிலே உங்கள் சபையிலிருந்து ஒரு கூட்ட ஜனங்கள் கடந்து வந்து ஜெபக்கூட்டம் நடத்த இருக்கிறார்கள் என்று சொன்னால் நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்கள் வீட்டிலிருக்கும் சோபா, டேபிள் எல்லாவற்றையும் ஒதுக்கி, வீட்டை துாய்மையாக்கி இடத்தை விஸ்தாரமாக்குவீர்கள் அல்லவா! அது போலவே கர்த்தர் நம்மை பெருகச் செய்வதற்கு நம்முடைய கூடாரத்தை விசாலமாக வைத்திருக்க வேண்டுமென்று விரும்புகிறார். கூடாரம் விசாலமாக வேண்டுமென்றால் அதன் திரைகளை விரிவாக்க வேண்டும். திரைகள் என்றால் என்ன? உங்களுடைய வாழ்க்கையை செழிக்க செய்யப்போகும் தரிசனமே உங்களின் கூடாரத்திரைகள். உங்கள் தரிசனத்தை பெரிதாக்குங்கள். உங்கள் எதிர்கால திட்டங்களை பெரிதாக்குங்கள். உங்களுடைய ஊழியத்திலே, சபையிலே கர்த்தர் கொடுத்த தரிசனத்தை அற்பமாய் எண்ணி விடாமல் பெரிதாக சிந்தியுங்கள். உங்கள் வியாபாரத்தில் கர்த்தர் பெரிய ஆசீர்வாதத்தைக் கொடுக்கப்போகிறார் என்பதை விசுவாசித்து அதற்கேற்றவாறு திட்டமிடுங்கள். உங்களின் எதிர்காலம், கல்வி, வேலை, திருமண வாழ்க்கை என எல்லாவற்றிலும் பெரிதானவைகளை எதிர்பாருங்கள்.



உதாரணத்திற்கு நம் கரங்களில் சிறிய டீஸ்பூன் இருக்குமாயின் அந்த அளவிற்குதான் எந்த பொருளையோ, திரவத்தையோ நிரப்ப முடியும். சிறு கரண்டியோ சிறிய பாத்திரமோ இருந்தால் அதின் கொள்ளளவுக்கேற்றவாறுதான் நிரப்ப முடியும். ஆனால் உங்கள் வீடுகளில் மேலே இருக்கும் தண்ணீர் சேகரிக்கும் தொட்டியில் நூற்றுக்கணக்காகன பாத்திரங்களை நிரப்பும் அளவிற்கு தண்ணீரை நிரப்ப முடியும் அல்லவா? அதுபோலவே உங்களின் விசுவாசமும் தரிசனமும் பெரிதாக இருக்கும்போது, தேவன் அதற்கேற்றவாறு உங்களை நிரப்பி ஆசீர்வதிப்பார்.

அன்பான தேவ ஊழியத்தை செய்யும் போதகரே.. ஆயிரம் ஆத்துமாக்கள் வேண்டும் என்று ஜெபித்துக்கொண்டிருக்கும் நீங்கள் நூறு பேர் ஆராதிக்கும் இடத்தை விட்டு செல்வதற்கு ஆயத்தமாகுங்கள். ஆயிரம் பேர் உட்காரக்கூடிய ஒரு இடத்தை

தேடுங்கள். அதை தேவன் தருவார் என்று விசுவாசியுங்கள். அதற்கான வேலைகளில் துரிதமாக இறங்குங்கள். அப்போதுதான் உங்கள் சபையை ஆயிரம்பேர் கொண்ட சபையாக தேவன் மாற்ற முடியும்.

2006ல் ரூஹா எழுப்புதல் ஆலயமானது ஒரு கட்டிடத்தின் அடித்தளத்தில் இருந்துதான் துவங்கியது. 200 பேர் உட்காரக்கூடிய இடம் அது. தேவன் 3 ஆராதனைகளிலும் தேவன் அதை நிரப்ப 400 பேர் அமரக்கூடிய இடத்திற்கு செல்கிறோம். அதிலும் 5 ஆராதனைகளை நடத்தி மக்கள் கூட்டம் நிரம்ப, இன்று 1000 பேர் ஆராதிக்ககூடிய இடத்திற்கு சென்றோம். இன்று அங்கேயும் 4 ஆராதனைகள் நடைபெற்று வருகிறது. நம்முடைய கூடாரத்தை விரிவுபடுத்தி கொண்டேயிருப்போம். தேவன் நிரப்பி கொண்டே இருப்பார்.

## தடை செய்யாதே

ஆண்டவரை நம்பி விசுவாசித்து உங்கள் திரைகளை விரிவாக்கி கூடாரத்தை விசாலமாக்குவதற்கு நீங்கள் ஒருபோதும் தடை செய்யாதிருங்கள். கர்த்தருக்காக பெரிய காரியங்களை செய்ய முற்படும்போது யார் தடுத்தாலும் நீங்கள் கேட்கவே கேட்காதீர்கள். ஆபிரகாம் ஈசாக்கை கர்த்தருக்கென்று கொடுக்கும்போது, சாராளிடம் கேட்டிருந்தால் நிச்சயம் தடுத்திருப்பாள். கோலியாத் பாளயத்திலே மிரட்டி கொண்டிருந்தபோது தாவீதின் சகோதரர்களும், சவுலும் நீ இங்கிருந்து புறப்படு, இது உன்னால் முடியாது என்று தடுத்தபோதும் கர்த்தரை நம்பி, பெரிய காரியங்களை செய்ய துடித்த தாவீதுதான் கோலியாத்தை வீழ்த்தினான். ஆம் பிரியமானவர்களே, உங்கள் தரிசனத்திற்கு எதிராக நீங்களே தடையாக மாறிவிடாதீர்கள்.

அநேகர் கர்த்தர் கொடுத்த தரிசனத்தை செய்வதற்கு ஆரம்பத்தில் அதிக உற்சாகத்துடனும் விசுவாசத்துடனும் இருக்கிறதை பார்க்க முடியும். ஆனால் தரிசனத்திற்கு விரோதமாக எழும்புகிற பிசாசின் சதி ஆலோசனைகள், பிரச்சனைகள், அவமானங்கள் வரும்போது, கர்த்தர் கொடுத்த தரிசனத்தை விட்டு, சோர்ந்துபோய் முடங்குவதே பெரிய தடைதான். நமக்கு எது இருக்கிறதோ இல்லையோ விசுவாசத்தை மாத்திரம் விட்டுவிடக்கூடாது. இதுவரை செய்யாத ஒரு காரியத்தை செய்ய எப்போதும் ஆயத்தமாகவே இருங்கள்.

## கயிறுகளை நீளமாக்கு

கூடாரத்தை விஸ்தாரமாக்க நாம் செய்ய வேண்டிய மற்றொரு காரியம் கயிறுகளை நீளமாக்குவது. கயிறை நீளமாக்குவது எப்படி? ஏற்கனவே இருக்கும் கயிறோடு புதிய கயிறுகளை இணைப்பது. ஆம் இந்த புதிய கயிறுகள்தான் நம்முடைய ஊழியமாக இருந்தாலும், குடும்பமாக இருந்தாலும், பிஸினஸாக இருந்தாலும் நமக்கு உதவி செய்ய போகிற நபர்கள். ஆம், கர்த்தர் உங்களுக்கு சில புதிய நபர்களின் தொடர்புகளையும், உறவுகளையும் ஏற்படுத்தப்போகிறார். அதன் மூலம் உங்கள் கயிறுகள் நீளமாக போகிறது. கயிறு நீளமாக நீளமாக கூடாரத்தை இழுத்துபிடிக்கும் பலமும் அதிகமாகும். அதன் காரணமாக உங்கள் கூடாரம் இன்னும் விஸ்தாரமாக போகிறது.

## முளைகளை உறுதிபடுத்து

முளைகள் என்பது கூடாரத்தை தாங்கி பிடிக்கும் ஆணியாகும். இது கூடாரத் திரைகளோடு இணைக்கப்பட்ட கயிற்றையும், பூமியையும் இணைக்கும் முக்கிய பொருளாகும். அது எவ்வளவு உறுதியாக பூமியில் ஆழமாக இருக்கிறதோ அந்தளவிற்கு கூடாரம் உறுதியாக நிற்கும். ஒருவேளை முளைகயிறு ஆழமாக இல்லாதபடி பிடுங்கி கொண்டுவந்தால் ஒட்டு மொத்த கூடாரமும் சரிந்து விழும். ஆவிக்குரிய வாழ்க்கை கர்த்தருக்குள் ஆழமாக இல்லாவிட்டால் நம்முடைய கூடாரம் நிலை நிற்க முடியாது. எல்லாவற்றிலும் தோல்வியடைந்து விடுவோம். கர்த்தரால் நம்மை ஆசீர்வதிக்கவே இயலாது.



ஆம் பிரியமானவர்களே, கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்குமுன் நம்மை நாமே சீர்தூக்கி பாக்கும் நேரமிது. அதுமட்டுல்ல மிகவும் முக்கியமானது, நம்முடைய கூடாரத்தில் காத்தர் வாசம் பண்ணுகிறாரா என்பது முக்கியம்.

## கர்த்தர் கூடாரத்தில் வாசம் பண்ண வேண்டும்

**பென்யமீனைக்குறித்து: கர்த்தருக்குப் பிரியமானவன், அவரோடே சுகமாய்த் தங்கியிருப்பான்; அவனை எந்நாளும் அவர் காப்பாற்றி, அவன் எல்லைக்குள்ளே வாசமாயிருப்பார் (உபா 33:12)**

**கர்த்தர் சீயோனைத் தெரிந்துகொண்டு, அது தமக்கு வாசஸ்தலமாகும்படி விரும்பினார். இது என்றென்றைக்கும் நான் தங்கும் இடம்; இதை நான் விரும்பினபடியால் இங்கே வாசம் பண்ணுவேன். (சங்கீதம் 132:13,14)**

**உன் தேவனாகிய கர்த்தர் உன்னை இரட்சிக்கவும், உன் சத்துருக்களை உனக்கு ஒப்புக்கொடுக்கவும், உன் பாளயத்திற்குள்ளே உலாவிக்கொண்டிருக்கிறார்; ஆகையால், அவர் உன்னிடத்தில் அசுசியான காரியத்தைக் கண்டு உன்னைவிட்டுப் போகாதபடிக்கு, உன் பாளயம் சுத்தமா யிருக்கக்கடவது. (உபாகமம் 23:14)**

தேவன் உங்களிடத்தில் வசிக்க வேண்டும் என்றால், உன் பாளயம் அதாவது வீடு பரிசுத்தமாயிருக்க வேண்டும். தேவன் வெறுக்கிற அசுத்தமான காரியங்கள் உன் வீட்டில் இருக்க கூடாது. லஞ்ச பணமும் கருப்பு பணமும் வரக்கூடாது. மந்திரித்து கொடுத்ததையும், உலப்பிரகாரமான கதைப்புஸ்தகங்களை உன் வீட்டிலிருந்து எடுத்துபோடுங்கள். உங்கள் வியாபாரம் நேர்மையாக இருக்கட்டும். உங்கள் வேலை ஸ்தலத்தில் உண்மையாயிருங்கள். உங்கள் குடும்பத்தினருக்கும், மனைவி, பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் உண்மையாயிருங்கள். அப்போதுதான் தேவன் உங்கள் கூடாரத்தில் வாசம் பண்ணுவார். நீங்கள் வலதுபுறமும் இடதுபுறமும் இடங்கொண்டு பெருகுவீர்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

மகிமையாய் நடைபெற்ற

# வெளிதேச ஊழியங்கள்

கடந்த ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நானும் எனது மனைவியும் துபாய், கனடா மற்றும் அமெரிக்க தேசங்களில் கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்ற தேவன் கிருபை செய்தார். ஒவ்வொரு இடங்களிலும் துதி ஆராதனையில் ஏறெடுத்து, கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கித்து, ஜனங்களுக்காக ஜெபிக்கவும், திருச்சபைகளை பரிசுத்த ஆவியினால் பலப்படுத்தவும், விசேஷமாக குடும்ப முகாமில் ஒவ்வொரு குடும்பத்திற்காக ஆலோசனைக்கொடுத்து, அவர்களுக்காக ஜெபித்து தீர்க்கதரிசன வார்த்தைகளைப் பகிர தேவன் எங்களை பயன்படுத்தினார்.

**“கடந்த வருடம் அமெரிக்கா சென்றிருந்தபோது, தங்கள் வேலையை இழந்து மறுபடியும் இந்தியாவிற்கு சென்றுவிடலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த இளம் தம்பதிகளைப் பார்த்து, “நீங்கள் இந்த தேசத்தில் ஒரு புதிய வீட்டை வாங்குவீர்கள்” என்று தீர்க்கதரிசனமாய் தேவன் பேசினார். அவர்களோ, எங்களுக்கு வேலையே இல்லை, எப்படி சொந்த வீட்டை வாங்குவோம் என்று திகைத்தார்கள். ஆனாலும் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்தார்கள். இந்த வருடம் ஒரு புதிய சொந்த வீட்டை வாங்கி, அதை அடியேன் மூலமாக பிரதிஷ்டை பண்ணவும் தேவன் அநுக்கிரகம் செய்து, தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்தினார்.”**

இவ்வாறாக, சென்ற இடமெல்லாம் கர்த்தருடைய நாமத்தின் மகிமையடையும்படி, அற்புதங்களைச் செய்து சாட்சியாக நிறுத்தினார். **கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!**

1

BCIM Malayalam Church

2

New Grace AG church

3

Christ Centered Global Ministries, *Dubai*

4

kingdom church, Dubai

5

KRCI CHURCH, Dubai

6

Arise Church, Brandon

7


Revival Family Camp, Tampa

# Ablaze 2025



தேவராஜ்ஜியத்தின் மீது பாரம்கொண்ட வாலிபர்கள் கிறிஸ்துவுக்குள் தங்கள் ஆவிக்குரிய வாழ்வை அனல்மூட்டிட சிறந்த வாலிபர் கூட்டமாக கடந்த ஜீலை 16ம் தேதி **Ablaze** 2025 நடைபெற்றது. பரிசுத்த ஆவியானவரின் அக்கினையை பெற்றுக்கொள்ள ஆர்வத்தோடும், தாகத்தோடும் வந்த நூற்றுக்கணக்கான இளம் வாலிபர்களால் வளாகம் நிறைந்திருந்தது. முதல் முறையாக எனது அன்பு மகன் Benny Thomasஐ வாலிபர்கள் மத்தியில் கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கிக்க தேவன் அவரை பயன்படுத்தினார். மேலும் வல்லமையான துதி ஆராதனையை தொடர்ந்து வாழ்வை மறுரூபப்படுத்தும் தேவ வார்த்தைகளை Ps. Johnson Daniel மற்றும் Sis. Cherie Mitchelle அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள்.

வாழ்க்கையை குறித்த பல கேள்விகளோடு வந்த அநேக வாலிபர்கள் தங்கள் கேள்விகளுக்கு பதில் கிடைத்ததென்றும், தங்கள் வாழ்வின் நோக்கத்தையும், தங்கள் அடையாளத்தையும் அறிந்துக்கொண்டோம் என்றும் உற்சாகத்தோடு சாட்சி பகிர்ந்தனர்.













போதைப்பொருட்களுக்கும் சிற்றின்பங்களுக்கும் அடிமைப்பட்டு, தங்கள் வாழ்க்கையை சீரழித்துக்கொண்டிருக்கிற வாலிபர்களுக்காக இன்றைய நாட்களில் நாம் அதிகமாக ஜெபிக்க வேண்டும். அதுமட்டுமல்லாது செயற்கை நுண்ணறிவானது இளைஞர்கள் சமுதாயத்தை தவறான வழிகாட்டுதலுக்கு நேராக நடத்தி செல்கிறது. ஒவ்வொரு நாளும் எதிர்கொள்கிற சவால் நிறைந்த காரியத்தில் ஜெயமெடுத்து, தங்கள் பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டு, இயேசுவுக்காய் வைராக்கியமாய் நிற்கும் வாலிபர்களாய் எழும்பிட ஜெபியுங்கள்.

கர்த்தருக்கு சித்தமானால் வாலிபர்களுக்காகவே அடுத்த வருடம் **2026 ஜனவரி 24.25.26** ஆகிய தேதிகளில் சென்னையில் வைத்து **ப்ரீடம் துதி ஆராதனை பெருவிழா** நடத்த திட்டமிட்டிருக்கிறோம். கர்த்தர் காரியத்தை வாய்க்கப்பண்ண ஜெபியுங்கள்.



# ஜார்கண்ட்

## மிஷனெரி ஊழியங்களின் அறிக்கை !

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த செப்டம்பர் மாதம் 09,10,11 ஆகிய தேதிகளில் நமது சகோதரர் போ. ஆல் வின்தாமஸ், சகோதரி செர்ரி மிட்சேல், சகோதரர் பென்னிதாமஸ் மற்றும் ரூஹா குழுவினர்கள் ஜார்கண்ட் மாநிலம் வடமேற்கு பகுதியில் உள்ள தும்கா என்ற மாவட்டத்திற்கு சென்று ஊழியம் செய்தனர்.

### நாள் 01

முதல் நாள் காலையில் சந்தாளி இன மக்களின் மிஷனெரி ஊழியர் கூடுகை நடைபெற்றது. தும்காவைச் சுற்றியுள்ள பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்து மிஷனரி ஊழியர்கள் கலந்து கொண்டார்கள். அவர்கள் மத்தியில் போதகர் ஆல்வின் தாமஸ் கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டு, ஊழியர்களை அபிஷேகத்தில் நடத்தினார்கள். ஏழு எக்காளங்களையும் ஊதி, மிஷனரி ஊழியர்களின் வாழ்க்கையில் இருக்கும் எல்லா தடைகளையும் நிர்மூலமாக்கும் விசேஷித்த ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. அது மட்டுமல்லாது மிஷனெரி ஊழியர்களை ஊக்குவிக்கும் விதமாக Dolak, Guitar மற்றும் Tambourine போன்ற இசைக்கருவிகள் வந்த ஒவ்வொரு ஊழியர்களுக்கும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அறுசுவை உணவும் அளிக்கப்பட்டது.











### நாள் 02

இரண்டாவது நாள் தும்காவிலிருந்து மிக மோசமான சாலை வழியாக சுமார் 4 மணி நேரம் பிரயாணம் செய்து Shahibganji என்ற மாவட்டத்திற்கு சென்று, அங்குள்ள சந்தாளி மக்கள் வசிக்கின்ற Suchchi என்ற குக்கிராமத்தில் உள்ள சபையில் ஊழியம் செய்தனர். மிகவும் படிப்பறிவில் லாத ஏழை மக்கள் வாழ்கின்ற அந்த கிராமத்தில் அவர்களுக்கு நமது போதகர் தேவனுடைய வார்த்தையை



வார்த்தையை பிரசங்கித்தார்கள். சகோதரி செர்ரி மிட்சேல் மற்றும் பென்னி தாமஸ் ஜனங்களின் விடுதலைக்காக, சுகத்திற்காக விசேஷித்த ஜெபங்களை ஏறெடுத்தார்கள். கூட்டத்திற்கு வந்த ஜனங்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டது. சந்தாளி மக்கள் தங்களுடைய வழக்கத்தின்படி மிகவும் அன்போடு வரவேற்றார்கள்.

















## நாள் 03

மூன்றாவது நாள் தும்க்காவிலிருந்து சுமார் ஒரு மணி நேரம் பிரயாணம் செய்து Dhanbarsha என்ற இடத்திற்கு வந்தோம். இங்கே கர்த்தருடைய கிருபையினால் நாம் திட்டமிட்டபடி நம்முடைய ரூஹா ஊழியத்தின் சார்பாக சபை கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. போதகர், சபைக்கான முக்கியத்துவத்தை அந்த மக்களிடம் எடுத்துரைத்து, சபைக் கூடி வருதலைக் குறித்து பேசி ஜனங்களுக்காக ஜெபித்தார்கள். எக்காளத்தை ஊதி கர்த்தருடைய நாமத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டிடப்பணியை ஆரம்பிக்க சிறு தொகை வழங்கப்பட்டது.











இந்த இடத்தில் அடுத்த ஆறு மாதத்திற்குள்ளாக சபை கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்ய ஜெபியுங்கள். கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுகிறபடி, சபையைக் கட்ட தாராலமாய் கொடுங்கள். நம்முடைய ரூஹா ஊழியத்தின் சார்பில் வட இந்தியாவில் ஒவ்வொருவருடமும் ஒரு சபையைக்கட்ட தீர்மானித்திருக்கிறோம்.

**வட இந்திய மிஷனெரி ஊழியம் தொடர்ந்து நடைபெறவும், கிறிஸ்துவை அறியாத மக்களை சந்திக்கவும், ஆலயங்கள் கட்டப்படவும் தீவிரமாய் செயல்படுவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**





# பெங்களுரு பெத்தேல் ஊழியங்களின் 25வது ஆண்டு விழா








கர்த்தருடைய கிருபையினால் பெங்களூர் **பெத்தேல் ஊழியங்களின்** 25வது ஆண்டு விழா கடந்த ஆகஸ்ட் மாதம் 25ம் தேதி கொண்டாடப்பட்டது. பெத்தேல் ஊழியங்களின் ஸ்தாபகர் **ரெவ். ரமேஷ்** அவர்களின் அன்பான அழைப்பினை ஏற்று, நமது சகோதரர் **போ. ஆல்வின் தாமஸ்** அவர்கள் கலந்து கொண்டு, துதி ஆராதனையுடன் கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார். அநேகர் விடுதலையையும் அற்புதத்தையும் பெற்றுக்கொண்டனர். அனைத்து போதகர்களையும் மேடைக்கு அழைத்து அவர்களுக்காகவும் அவர்கள் செய்து வருகிற ஊழியங்களுக்காகவும் விசேஷித்த பிரார்த்தனை ஏறெடுக்கப்பட்டது. அநேக தேவனுடைய ஊழியர்கள் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்தனர். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது!

சாட்சிகள்

நான் கர்த்தருடைய ஊழியத்தை செய்து வருகிறேன். கொடுக்கப்பட்ட தேவ செய்தி எனக்கான தீர்க்கதரிசன வார்த்தையாக இருந்தது. சோர்ந்து போயிருந்த என்னை தேவன் வார்த்தையினால் பெலப்படுத்தினார்.



துதி ஆராதனை வேளையின்போது, தேவன் என்னை அபிஷேகத்தினால் நிரப்பினார். கண்ணீரோடு வந்த என்னை தேவன் தம்முடைய வார்த்தையினால் தேற்றினார். என் துக்கம் சந்தோஷமாய் மாறிற்று. தேவனுக்கே மகிமை!



# GLOBAL TAMIL CHRISTIAN FAMILIES CONFERENCE 2025

Jesus Unlimited Ministries ஊழியங்களின் நிறுவனர் **சுவிசேஷகர் சாம் ராஜ்குமார்** அவர்களால் நடத்தப்பட்ட உலகத்தமிழ் கிறிஸ்துவ குடும்பங்களின் சங்கமம், "இனி" என்ற தலைப்பில் ஆகஸ்ட் மாதம் சென்னையில் வைத்து நடைபெற்றது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிறிஸ்தவ தலைவர்களும், போதகர்களும் இந்த கூடுகையில் கலந்து கொண்டார்கள். இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் தலைவர் **Dr. Paul Dhinakaran** அவர்கள் தேவசெய்தி வழங்கினார்கள். நம்முடைய சகோதரர் **Rev. Alwin Thomas** அவர்கள் துதி ஆராதனை ஏறெடுத்து, தீர்க்கதரிசன வார்த்தையைப் பிரகடனப்படுத்தினார்கள். மேலும் பெந்தெகொஸ்தே மாமன்றத்தில் உள்ள தலைவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.










# கிறிஸ்மஸை ஏழை எளியவர்களுடன் கொண்டாடுங்கள்!

அன்பானவர்களே, ஒவ்வொரு நாளும் நெசா மூலமாக ஏழை எளியவர்கள், மாற்றுத்திறனாளிகள் என அநேகருக்கு உதவிகளை செய்துகொண்டு வருகிறதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

- **ஒவ்வொரு மாதமும் கணவனை இழந்து தவித்துக் கொண்டிருக்கிற 50க்கும் அதிகமான கைம்பெண்களுக்கு அரிசி வழங்கப்பட்டு வருகிறது.**

- **ஒவ்வொரு நாளும் ஒரு வேலை உணவிற்கும் போராடுகிற மக்கள் வசிக்கும் இடங்களுக்கும், வீதிகளில் வாழ்பவர்களுக்கும், மருத்துவமனைகளுக்குச் சென்று உணவளித்து வருகிறோம். குறிப்பாக சென்னையில் முக்கிய மருத்துவமனையான அடையாறு கேன்சர் மருத்துவமனையில் 180 பேருக்கும் மேற்பட்டவர்களுக்கும் அன்றாடம் உணவளித்து வருகிறோம், அங்கு வியாதியினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களை பராமரிக்கிறவர்களுக்கு சிறப்பான முறையில் உணவளித்து வருகிறோம்.**

- **நெசா டியூசன் - சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி உபரகரணங்களை வாங்கி தருவதோடு, சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் கல்வியில் பின் தங்கிய மாணவர்களை படிப்பில் ஊக்கப்படுத்த மாலை வகுப்பு நடத்தி, கல்வி தரத்தை உயர்த்தி வருகிறது.**

வருகிற டிசம்பர் மாதத்தில் சுமார் 1000க்கும் மேற்பட்ட ஏழை எளியவர்களுக்கு புத்தாடைகளை வழங்கி, அவர்களுக்கு அறுசுவை உணவுகளைக் கொடுத்து கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை அறிவித்திட நெசாவோடு இணைந்து சமுதாயத்தில் நலிவடைந்தவர்களைத் தாங்குங்கள். ஒரு குழந்தைக்கு 1000 ரூபாய் செலவாகிறது. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு உதவி செய்ய உங்கள் உதாரத்துவமான கரங்களை நீட்டுங்கள்.

இப்படிப்பட்ட நற்காரியங்களைச் செய்து வருகிற நெசாவை உங்களுடைய நன்கொடைகளால் தாங்குங்கள். உங்கள் பிறந்தநாள் மற்றும் திருமண நாள் போன்ற விசேஷ நாட்களில் ஏழை எளியவர்களை நினைவு கூறுங்கள். "சிறுமைப் பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான், தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்" (சங்கீதம் 41:1) என்ற வசனத்தின்படி **கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.**

Scan here to pay using UPI app

## NESSA TRUST

| | |
|---|---|
| Bank: | HDFC BANK LTD |
| Name: | NESSA TRUST |
| Acc.No: | 50200002673830 |
| Branch Name: | KODAMBAKKAM BRANCH |
| IFSC Code: | HDFC0000574 " |

G Pay +91 9444150777







உங்களுடைய உதாரத்துவமான நன்கொடைகளை NESSA TRUST என்ற பெயரில் மணி ஆர்டர் அல்லது காசோலையாக அனுப்பலாம். நீங்கள் நன்கொடைகளை அனுப்பிய பிறகு 9884901777 என்ற எண்ணிற்கு வாட்ப் அல்லது போன் மூலமாக கட்டாயம் தெரிவியுங்கள். உங்களுக்கு இரசீது அனுப்ப எங்களுக்கு ஏதுவாயிருக்கும்.






WAYS TO GIVE

1 Google Pay

+91 9444150777

G Pay पे paytm

2 Website (Inside India / International)

Our Secure Payment Gateway

ruahministries.org/give-online

Razorpay PayPal

SCAN QR CODE TO PAY THRIUGH UPI APP

**RUAH MINISTRIES**

| | |
|---|---|
| Bank: | HDFC BANK LTD |
| Name: | RUAH MINISTRIES |
| Acc.No: | 05741450000037 |
| Branch Name: | KODAMBAKKAM BRANCH |
| IFSC Code: | HDFC0000574 |

**எளிதாக உங்களை காணிக்கைகளை விதைக்கலாம்!**

உங்களுடைய காணிக்கைகளை அனுப்பியதும் தவறாமல் **9884901777** என்ற எண்ணிற்கு தகவல்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுது உங்களுடைய காணிக்கைக்கான இரசீது மற்றும் கடிதம் உங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு ஏதுவாயிருக்கும்.

**வியாதியினால் கஷ்டப்படுகிறீர்களா? கடன் தொல்லையா?**

**குடும்பத்தில் சமாதானம் இல்லையா?**

அற்புதத்திற்காக காத்துக்கொண்டிருக்கிறீர்களா? கவலைப்படாதிருங்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். இன்றும் உங்களுக்கு அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்வார். உங்களுடைய ஜெப விண்ணப்பங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

## பரிசுத்த ஆராதனைகள்

| | |
|---|---|
| **முதல் ஆராதனை** | காலை 6 மணிக்கு |
| **இரண்டாம் ஆராதனை** | காலை 8 மணிக்கு |

**இடம்:** ரூஹா துதி ஜெப மையம், வடபழனி

| | |
|---|---|
| **மூன்றாம் ஆராதனை** | காலை 10 மணிக்கு |

**இடம்:** CSI St. Thomas Hr. Sec School, St. Thomas Mount, Chennai

(ஒவ்வொரு **மாதமும் முதல் வாரத்தில்** திருவிருந்து ஆராதனை நடைபெறும்)

| | |
|---|---|
| **செவ்வாய்** | **தெபோராள் பெண்கள் கூடுகை** (மாலை 6.30 மணிக்கு) |
| **புதன்** | **இயேசுவின் தொடுதல்** (விசேஷித்த சுகம் மற்றும் விடுதலை ஜெபம்) காலை 10 மணிக்கு |
| **சனி** | **வாலிபர்கள் கூடுகை** (மாலை 6.30 மணிக்கு) |

ஒவ்வொரு மாதமும் **2வது சனிக்கிழமை விசேஷித்த உபவாசம் ஜெபம்** (காலை 10 மணிக்கு)

ஒவ்வொரு மாதமும் **3வது வெள்ளிகிழமை முழு இரவு ஜெபம்** (இரவு 10 மணிக்கு)

ரூஹா ஊழியங்களின் ஊழிய விபரங்களை அறிந்து கொள்வதற்கும், உங்களுடைய ஜெப உதவிக்கும் **9884901777, 9884710777** என்ற எண்களைத் தொடர்பு கொள்ளலாம். மின்னஞ்சல் முகவரி: **prayer.ruah@gmail.com**